புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2055 • மார்ச் 14, 2024 • புரட்சி 24 • முழக்கம் 09 • விலை ரூ.3.00

## எழுதிய தீர்ப்பை திருத்துவதுதான் சனாதன தர்மமா?
# நீதிபதி அனிதா சுமந்துக்கு குவியும் கண்டனம்

அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், சேகர்பாபு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் சனாதனத்திற்கு எதிராக பேசியது சட்டத்திற்கு புறம்பானது என்று தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்ற நீதிபதி அனிதா சுமந்த், சனாதன தர்மத்தை தூக்கிப் பிடிப்பதற்காக அந்த தீர்ப்பை முழுமையாக பயன்படுத்திக் கொண்டார். இந்த தீர்ப்பின் நகல் கடந்த மார்ச் 7ஆம் தேதி இணையதளத்தில் பதிவேற்றப்பட்டது. திடீரென்று அடுத்த தினமே அந்த தீர்ப்பு இணையதளத்தில் இருந்து திரும்பப் பெறப்பட்டது. மார்ச் 9 ஆம் தேதி பல்வேறு திருத்தங்களுடன் அந்த தீர்ப்பு மீண்டும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. சனாதனம் பற்றிய கருத்துக்கள் அதில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

சனாதனம் பற்றி குப்புசாமி சாஸ்திரியின் ஆய்வு மையத்தில் உள்ள பேராசிரியரின் கருத்தை நீதிமன்றம் கேட்டதாகவும், அவர்கள் தந்த விளக்கத்தின் அடிப்படையில் “சனாதன தர்மம் பிராமண - வைசிய - சத்திரிய - சூத்திர வர்ணாசிரம தர்மத்திற்கு எந்தத் தொடர்பும் கிடையாது, சனாதன தர்மம் வாழ்க்கையின் விழுமியங்களை பேசுகிறது. அது ஏற்றத்தாழ்வுகளை பேசவில்லை” என்று அந்த நிறுவனம் தங்களிடம் கூறிவிட்டதாக தீர்ப்பில் நீதிபதி அனிதா சுமந்த் சுட்டிக்காட்டி இருக்கிறார். இப்போது அது திருத்தப்பட்டிருக்கிறது.

அது என்ன திருத்தம் என்றால், சனாதன தர்மம் பிராமண - வைசிய - சத்திரிய - சூத்திர என்ற பேதங்களை மட்டுமே பேசவில்லை, அது வேறு ஒழுக்க விழுமியங்களையும் பேசுகிறது. எனவே இந்த சனாதன தர்மம் பிராமண - வைசிய - சத்திரிய - சூத்திர என்ற பேதங்களையும் பேசுகிறது என்பதை மறைமுகமாக திருத்தப்பட்ட இந்த தீர்ப்பு ஒத்துக்கொண்டுள்ளது.



இரண்டாவதாக ஜாதி அமைப்பு ஒரு ஒரு நூற்றாண்டுக்கு முன்பாகத்தான் தொடங்கப்பட்டது என்ற ஒரு கருத்தையும் நீதிபதி முன்வைத்துள்ளார். ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் தான் ஜாதி அமைப்பு உருவானது என்பதற்கு இவர்களிடம் என்ன ஆதாரம் இருக்கிறது என்ற கேள்வி எழும் காரணத்தால் அண்மைக்காலத்தில் தான் ஜாதி தோன்றியது என்று தீர்ப்பை திருத்தி மாற்றியமைத்திருக்கிறார்கள்.

மற்றொன்று இந்துமதத்தில் பல்வேறு பிரிவுகள் இருந்தாலும் அந்த பிரிவுகள் கூறுகிற கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடுகள் இல்லை. எல்லா கருத்துகளும் ஒன்றுக்கொன்று ஒத்து போவதுதான் என்று வேலுக்குடி கிருஷ்ணன் என்ற மதப் பிரச்சாரகர் யூடியூப் ஒன்றில் ஆற்றிய உரையை நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். வேலுக்குடி கிருஷ்ணனின் யூடியூப் உரைகள் முற்றாக அந்த தீர்ப்பில் இருந்து அகற்றப்பட்டு முன்னாள் குடியரசுத் தலைவர் இராதாகிருஷ்ணனின் கருத்தை அந்த தீர்ப்பில் சேர்த்துள்ளனர். தீர்ப்பு ஏற்கனவே 107 பக்கங்களை கொண்டிருந்தது, ஆனால் திருத்தப்பட்ட பிறகு 102 பக்கங்களாக குறைந்துள்ளது. ஆனால் முகப்பு பக்கத்தில் 107 பக்கங்களுக்கு கொண்ட அட்டவணை, அப்படியே திருத்தப்பட்ட தீர்ப்பில் இடம்பெற்றிருக்கிறது. தற்போது இது மிகப்பெரிய குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஒரு வழக்கில் மட்டும் இரண்டு தீர்ப்புகள் வந்திருக்கிறது.

மற்றொன்று சனாதன தர்மம் என்பது இந்துக்களுக்கு மட்டுமே உரித்தானது. அது இந்துக்களால் பின்பற்றப்படும் வாழ்க்கை நெறி என்பதையும் இந்த தீர்ப்பு உறுதிப்படுத்தியுள்ளது. இணையதளத்தில் ஒரு தீர்ப்பை வெளியிட்ட பிறகு நீதிபதியால் அந்த தீர்ப்பில் ஒரு திருத்தைக்கூட மாற்றமுடியாது என்று சட்ட வல்லுநர்கள் கூறுகிறார்கள். ஏற்கனவே தலைமைச் செயலாளராக இருந்த கிரிஜா வைத்தியநாதன் பசுமை தீர்ப்பாயத்திற்கு தலைவராக நியமிக்கப்பட்ட போது தொடரப்பட்ட வழக்கில் தலைமை நீதிபதியாக இருந்தவர் அதில் சில மாற்றங்களை செய்ய வேண்டும் என்ற போதும், அந்த வழக்கை மீண்டும் விசாரணை செய்துதான் மாற்றங்களை கொண்டுவந்தார் என்று சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப்போது மாற்றங்களை செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் கருதியிருந்தால், அதை மீண்டும் பட்டியலிட்டு விசாரணைக்கு உட்படுத்தி உரிய வழக்கறிஞர்களிடம் தீர்ப்பு நகலை கொடுத்து அதற்கு பிறகே மாற்றங்களை செய்ய வேண்டுமே தவிர இவர்கள் தன்னிச்சையாக தீர்ப்பை மாற்றி எழுத முடியாது என்று சட்ட வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் இவர்கள் தன்னிச்சையாக சனாதனத்திற்கு விளக்கம் சொல்லுவார்கள், தன்னிச்சையாக சனாதனம் வேறு வருணாசிரமம் வேறு என்று சொல்லுவார்கள். தன்னிச்சையாக ஜாதி தோன்றிய காலத்தை நிர்ணயம் செய்வார்கள், தன்னிச்சையாக ஜாதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று கூறுவார்கள், தன்னிச்சையாக இவர்கள் எழுதிய தீர்ப்பை இவர்களே மாற்றிக்கொள்வார்கள். ஆக சனாதன தர்மம் என்பது தன்னிச்சையாக ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்காக செய்யும் சர்வதேச தில்லுமுல்லுகள் என்பதைத்தான் இந்த தீர்ப்பின் மாற்றங்களும் திருத்தங்களும் உணர்த்துகிறது.

கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன்
வாட்ஸ்அப் பதிவு (11.03.2024)

## மார்ச் 22–இல் கழக செயலவை கூடுகிறது!

திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாநில செயலவைக் கூட்டம் ஈரோட்டில் மார்ச் 21 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடைபெற உள்ளது.

**நாள் : 21.03.24 வியாழன்**
**நேரம் : காலை 9.30 மணி முதல்**
**இடம் : கே.கே.எஸ்.கே மகால், பவானி சாலை, ஈரோடு.**

பொருள் :

- **2024 பாராளுமன்றத் தேர்தலில் கழகத்தின் நிலைப்பாடு.**
- **கழகத்தின் எதிர்கால செயல் திட்டங்கள்.**
- **நடைபெற்று வரும் பரப்புரை பயண அனுபவங்கள்.**

கழகத்தின் செயலவை உறுப்பினர்கள் (மாவட்டத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைமைக் குழு உறுப்பினர்கள்) இந்த செயலவைக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களின் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**– தபசி குமரன்,**
**தலைமை நிலையச் செயலாளர்,**
**திராவிடர் விடுதலைக் கழகம்.**
*11.03.2024*

## மோடி ஆட்சியின் மோசமான சர்வாதிகாரம்

இந்தியாவில் மோடி ஆட்சி படு மோசமான சர்வாதிகாரத்தை நோக்கி சென்றுகொண்டுள்ளது என்று சர்வதேச ஆய்வு நிறுவனம் தனது 2024ஆம் ஆண்டிற்கான ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது. ஸ்வீடன் நாட்டின் கோதன்பர்க் நகரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் நிறுவனம் V-Dem Institute ஆகும்.



உலகின் பல்வேறு நாடுகளில் வெவ்வேறு வகையான ஜனநாயகங்கள் எப்படி செயல்பட்டு வருகின்றன என்பது குறித்து மிக நுட்பமாக ஆய்வு செய்யும் உலகின் முதன்மையானது இந்த நிறுவனம். இந்த நிறுவனத்தில் மட்டும் 180 நாடுகளை சேர்ந்த 4080 பேர் பணியாற்றுகின்றனர். 201 நாடுகளை பற்றிய 31 மில்லியன் தரவுகள் இந்த நிறுவனத்திடம் உள்ளது. 1789 முதல் 2023 வரை உள்ள தரவுகள் இதில் அடங்கியுள்ளது.

மிக துல்லியமாக ஒவ்வொரு நாட்டில் உள்ள வெவ்வேறு வகையான ஜனநாயகப் பண்பு குறித்து அறிக்கை தருவது இந்த நிறுவனம். அத்தகைய நிறுவனம் 2024ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் மோடி ஆட்சி மிக மோசமான சர்வாதிகாரத்தை நோக்கி சென்றுகொண்டுள்ளது. இங்கு பேச்சுரிமை கிடையாது. எதிர்ப்பவர்கள் கடுமையாக ஒடுக்கப்படுகிறார்கள், அரசு இயந்திரங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மூன்றாவது முறையாக இந்தியாவில் இவர்கள் ஆட்சிக்கு வந்தால் மிகமிக மோசமான் சர்வாதிகாரத்தை நோக்கி செல்லும் ஆபத்து இருக்கிறது. சிறுபான்மையினர் உரிமைகள் மற்றும் சிவில் உரிமைகள் நிச்சயம் இருக்காது என்று எச்சரித்துள்ளது V-Dem நிறுவனம். மோடி ஆட்சிக்கு இதைவிட சரியான சான்றிதழ் கொடுக்கக்கூடிய நிறுவனம் வேறு எதுவும் இருக்க முடியாது.

## தலையங்கம்

# சி.ஏ.ஏ.-வை திரும்பப் பெறு!

இந்தியாவின் மதச்சார்பின்மையை சுக்கு நூறாக உடைக்கும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை அமல்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்ட இந்த சட்டத்தின்படி, அண்டை நாடுகளான வங்கதேசம், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானில் இருந்து இந்துக்கள், சீக்கியர்கள், பவுத்தர்கள், ஜெயினர்கள், பாரசீகர்கள், கிறித்தவர்கள் இந்தியாவுக்கு வந்தால் அவர்கள் குடியுரிமை பெறலாம். ஆனால் இசுலாமியர்கள் வந்தால் அவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படாது.

அதேபோல இலங்கையில் இருந்து வரும் தமிழர்களுக்கும், அவர்கள் இந்துக்களாக இருந்தாலும் குடியுரிமை வழங்கப்படாது. ஆக, பாஜகவின் அணுவில் ஊறிப்போன மத வெறுப்பும், தமிழின விரோதப் போக்குமே இந்த குடியுரிமை திருத்தச் சட்டத்தில் அப்பட்டமாக வெளிப்பட்டிருக்கிறது. தமிழ், தமிழர் என்றெல்லாம் மோடி பேசுவதெல்லாம் பாஜக மீதான வெறுப்புணர்வை கரைக்கும் முயற்சியே தவிர, உண்மையான பற்றில்லை என்பதற்கு இது ஒன்றே போதுமானது. 2019ஆம் ஆண்டில் இந்த சட்டத்திற்கு எதிராக மிகக் கடுமையான போராட்டங்கள் நாடு முழுவதும் வெடித்தன. போராட்டங்களை கட்டுப்படுத்த முடியாமல் பாஜக அரசு திணறி வந்த நிலையில், கொரோனா பேரிடர் பரவி ஒட்டுமொத்த உலகையும் முடக்கியது. அதில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிரான போராட்டங்களும் முடங்கின.

இந்நிலையில் தேர்தல் சமயம் பார்த்து, இச்சட்டத்தை அமல்படுத்துவதாக அறிவித்திருக்கிறது ஒன்றிய அரசு. அப்போது இச்சட்டத்தை உறுதியாக எதிர்த்த மதச்சார்பற்ற அமைப்புகள், இப்போதும் உறுதியோடு எதிர்க்கின்றன. ஆனால் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக அப்போது வாக்களித்தது அதிமுக. மாநிலங்களவையில் அதிமுகவின் உறுப்பினர்கள் 11 பேர் ஆதரிக்கவில்லையென்றால் இந்தச் சட்டம் நிறைவேறியிருக்காது. குடியுரிமைத் திருத்தச் சட்டத்தால் ஒரு இசுலாமியருக்கு கூட பாதிப்பே இல்லை என்று பேசினார் எடப்பாடி பழனிசாமி. ஆட்சியை தக்கவைக்க வேண்டுமென்பதற்காக, பாஜகவிற்கு அடிபணிந்து தமிழ்நாட்டுக்கு எடப்பாடி பழனிசாமி செய்த துரோகங்களில் இதுவும் ஒன்று.

"மதத்தின் அடிப்படையில் குடியுரிமை வழங்கக்கூடாது, ஈழத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும்" என்று திமுகவும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் திருத்தம் கோரியதை கூட அதிமுக அன்று ஆதரிக்கவில்லை. ஆனால் இன்றைக்கு பாஜகவின் கூட்டணியில் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக, குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவது தவறு என நாடகமாடுகிறார் எடப்பாடி பழனிசாமி. ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு சிறுபான்மை சமூகத்துக்கு எடப்பாடி பழனிசாமி இழைத்த அநீதிகளால், அச்சமூகங்களின் வாக்குகளை பெற முடியாமல் அதிமுக திணறிக் கொண்டிருக்கிறது. உள்ளாட்சி தேர்தல்கள் மற்றும் 2021 சட்டமன்றத் தேர்தலில் ஒட்டுமொத்த சிறுபான்மை சமூகங்களும் அதிமுகவை புறக்கணித்தது. இதனால் தற்போது சி.ஏ.ஏ. சட்டத்தை எதிர்ப்பதைப் போல நாடகமாடுகிறார் எடப்பாடி பழனிசாமி.

உண்மையில் இது இசுலாமியர்களுக்கோ, ஈழத் தமிழர்களுக்கோ மட்டுமேயான பிரச்னை அல்ல. இந்துக்களுக்கும் மிகப்பெரிய ஆபத்து இச்சட்டத்தில் இருக்கிறது. இச்சட்டத்தின்படி குடிமக்கள் பதிவு செய்து கொள்ளும் முறை வந்தால், நாம் ஒவ்வொருவரும் நமது பெற்றோர் – பாட்டன் – முப்பாட்டன் கால ஆவணங்களைக் காட்டித்தான், நாங்கள் எல்லோரும் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என நிரூபிக்க வேண்டும். இல்லை என்றால், நம்மை எல்லாம் இந்த நாட்டுக் 'குடிமக்கள் இல்லை' என்று சொல்லி, நமது குடியுரிமையைப் பறித்து விடுவார்கள். உரிய ஆவணங்கள் இல்லை என்பதற்காக நாட்டில் 11 விழுக்காட்டினருக்கு ஆதார் அட்டையே வழங்கப்படவில்லை. அவர்களில் இந்துக்களும் இருக்கிறார்கள். எனவே இந்துக்களுக்கும் இதில் ஆபத்து இருக்கிறது.

2019ஆம் ஆண்டில் வடகிழக்கு மாநிலங்களில் பெரும் வன்முறையை தூண்டுவதற்கும், நூற்றுக்கணக்கானோர் உயிரிழப்பதற்கும் காரணமாக இருந்த இந்த குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை பாஜக அரசு மீண்டும் அமல்படுத்தியிருப்பது மனிதத் தன்மையற்ற ஒரு செயல். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இதன் பின்விளைவுகளை பாஜக நிச்சயம் சந்திக்கப் போகிறது.

# தமிழ்நாட்டின் மீதான பாஜகவின் வன்மம்!

போதைப்பொருள் கடத்தல் வழக்கில் ஜாபர் சாதிக் என்பவர் கைது செய்யப்பட்டதை ஒட்டி, ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் மிக மோசமாக சித்திரிப்பு செய்கிறது வேலையில் இறங்கியிருக்கிறது பாஜக. பாஜக ஆளும் மாநிலங்களான குஜராத், உத்தரப் பிரதேசத்தில் என்ன நிலைமை என்பது கூட தெரியாமல், தமிழ்நாட்டின் மீது சேற்றை வாரி இறைக்கும் பாஜகவினருக்கு பத்திரிகையாளர் அரவிந்தாக்‌ஷன் தரவுகளால் பதிலடி கொடுத்திருக்கிறார்.

15.02.2024 அன்று West Delhi-ல் இருக்கும் Aventa Company-ன் basement -ல் போதை மருந்து தயாரிப்பதற்கான pseudoephedrine எனும் மூலப்பொருள் 50.070 கிலோ பறிமுதல் செய்யப்பட்டு மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக ஒன்றிய அரசின் போதைத் தடுப்புப் பிரிவின் (NCB) டெல்லி மண்டல அலுவலகம் வழக்குப் பதிவு செய்துள்ளது. வழக்கு எண்-VIII /03/DZU/2024 – இந்த வழக்குக்கு விகாஷ் ஷர்மா என்ற ஆய்வாளர்தான் விசாரணை அதிகாரி.

இது சம்பந்தமாக 23-02-2024 அன்று ஜாபர் சாதிக் என்ற தமிழ்நாட்டைச் சார்ந்தவருக்கு சம்மன் வழங்கப்பட்டு,தொடர் சோதனைகள் மற்றும் சீல் வைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஜாபர் சாதிக் திமுகவில் இருந்தார் என்ற ஒரே காரணத்திற்காக தமிழ்நாடு போதைப்பொருள் வர்த்தகத்தின் மையமாக விளங்குகிறது என்ற தோற்றத்தை உருவாக்கும் மாபெரும் சதி அரங்கேறி வருகிறது

அதிமுக ஆட்சிக்காலத்தில் தமிழ்நாடு பயங்கரவாதிகளின் கூடாரமாகிறது என்ற பொய்யை திரும்ப திரும்ப பரப்பினார்கள். அதே போன்றதொரு தோற்றத்தை இப்போது போதைப்பொருள் பறிமுதல் விவகாரத்தில் உருவாக்க முயற்சிக்கிறார்கள். இப்போது வரை, இந்த வழக்கு குறித்து போதைப்பொருள் தடுப்பு முனையம் சார்பில் எந்தவொரு தகவலும் அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்படவில்லை.

அண்ணாமலையின் வார் ரூம், சவுக்கு சங்கர் போன்ற தரகர்கள்தான் கதை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். புலனாய்வு ஏஜென்சிகள் முறையாக விசாரித்து யாராக இருந்தாலும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக, எதிர்க்கட்சிகள் ஆளக்கூடிய மாநிலத்தில் அதிகாரப்பூர்வமற்ற தகவல்களை பரப்பி பாஜகவும், அதன் அல்லக்கைகளும் செய்து வரும் அரசியலுக்கு வெளிப்படையாக உதவி செய்யக்கூடாது. இப்பொழுது இந்த புலனாய்வு அமைப்புகள் அதைத்தான் செய்கின்றன.

குஜராத்தின் அதானி முந்த்ரா துறைமுகத்தில் 17/09/21 மற்றும் 19/09/21 ஆகிய இரண்டு தேதிகளில் 20,000 கோடி ரூபாய் மதிப்பிலான 2988.21 கிலோ ஹெராயின் பிடிபட்டது. இந்திய வரலாற்றிலேயே இவ்வளவு பெரிய அளவு போதைப்பொருள் பிடிபட்டதில்லை என்று அரசு தரப்பில் கூறப்பட்டது. தற்போது NIA விசாரித்து வரும் இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு மூன்று முறை துணை அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முந்த்ரா துறைமுகத்தில் 2,988 கிலோ ஹெராயின் பறிமுதல் செய்யப்படுவதற்கு முன்பாக அதைவிட 500 மடங்கு அதிகமான ஹெராயின், அதாவது 15,391.80 கிலோ பாஜக ஆளும் உத்தரப் பிரதேசத்தில் அழிக்கப்பட்டுள்ளதாக NCB-ன் அறிக்கை கூறுகிறது. உத்தரப் பிரதேசத்தில் எப்போது 15,391.80 கிலோ ஹெராயின் பிடிபட்டது? யாருக்கும் தெரியாது! யார் பறிமுதல் செய்தது? பதில் தெரியாது. எந்த ஏஜென்சி 15,391.80 கிலோ ஹெராயின் பறிமுதல் செய்த வழக்கை விசாரிக்கிறது? அதுவும் தெரியாது.

இப்படி போதைப்பொருள் பறிமுதல் விவகாரத்தில் என்ன நடக்கிறது, ஏது நடக்கிறது என்று யாருக்கும் தெரியாது. யாராலும் தெரிந்து கொள்ளவும் முடியாது. சம்பந்தப்பட்ட ஏஜென்சியாக கூறினால் மட்டுமே மக்கள் தெரிந்துகொள்ள இயலும். குஜராத் விவகாரம் வெளியில் வரவில்லை; உத்தரப் பிரதேச விவகாரம் வெளியில் வரவில்லை. அப்படி இருக்க, டெல்லியில் பிடிபட்ட 50.070 கிலோ pseudoephedrine விவகாரத்தை மட்டும், தமிழ்நாடு அரசாங்கத்தின் துணையோடு போதைப்பொருள் சாம்ராஜ்யம் நடப்பது போல சித்தரிக்க முயல்வது அயோக்கியத்தனமானது இல்லையா?

திமுக மீதான வன்மத்தின் காரணத்தால் விவகாரத்தை பூதாகாரமாக்கி தமிழ்நாட்டின் மீது மிக மோசமான ஓவியத்தை தீட்டிக்கொண்டுள்ளனர். தமிழ்நாடு காவல்துறை போல போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கும் காவல்துறை இந்தியாவிலேயே வேறொன்றும் கிடையாது. தனிப்பட்ட அரசியல் காரணங்களுக்காக ஒரு மாநிலத்தையே அசிங்கப்படுத்தும் அயோக்கியத்தனத்தை எந்தவிதத்திலும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்று பதிவிட்டிருக்கிறார் அரவிந்தாக்‌ஷன்.

ஒவ்வொரு தேர்தலின்போதும் எதையாவது அவதூறு பரப்புவதும், அதைவைத்து தமிழ்நாட்டின் அமைதியை குலைக்க முயல்வதுமே பாஜகவின் வாடிக்கையாக இருக்கிறது. ஆனால் பாஜகவின் சதித் திட்டங்கள் தமிழ்நாட்டில் ஒருபோதும் எடுபட்டதில்லை. இப்போதும் ஏமாற்றமே மிஞ்சப் போகிறது.

# பெரியார் முழக்கம் இதழுக்கு ரூ.1,000 வளர்ச்சி நிதி

திருவண்ணாமலை : திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஒன்றியம், நாராயணக் குப்பத்தைச் சேர்ந்த இரா. வீரமணி – ஏ.கார்ஷீலா ஆகியோரின் இணையேற்பு விழா 22.02.2024 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

விழாவில் பங்கேற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் ஈரோடு இரா.வீரமணி, கழகத் தலைமைக் குழு உறுப்பினர் ந.அய்யனார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்வை கழக கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் க.இராமர் ஒருங்கிணைத்தார்.

முன்னதாக விடுதலைக் குரல் குழுவின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இணையேற்பு விழாவின் மகிழ்வாக மணமக்கள் கழக வார ஏடான "புரட்சிப் பெரியார் முழக்கம்" இதழ் வளர்ச்சி நிதியாக ரூ.1000/- நன்கொடையாக வழங்கினார்கள்.

## காஞ்சி பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர்!



**காஞ்சிபுரம்** : பாசிச பாஜகவை வீழ்த்துவோம்! ஜனநாயக இந்தியாவைக் கட்டமைப்போம்! என்ற கொள்கை முழக்கத்தோடு காஞ்சி மக்கள் மன்றத்தின் பேரணி – பொதுக்கூட்டம் – கலை நிகழ்ச்சிகள் 09.03.2024 அன்று காஞ்சி பெரியார் நினைவுத் தூண் அருகில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இதில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, காஞ்சிபுரம் மாவட்ட அமைப்பாளர் ரவிபாரதி, பெங்களூர் சித்தார்த்தன், அருண்குமார், எட்வின் பிரபாகரன், சூர்யா, மயிலை குமார், அன்னூர் விஷ்ணு, உதயா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



# எதையுமே அழுத்தமாகப் பேசுபவர் அறிஞர் அண்ணா!

கொளத்தூர் மணி

**கோவை மாவட்டக் கழக சார்பில் 02.03.2024 அன்று கோவை அண்ணாமலை அரங்கில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நினைவுநாள் கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை:-**

**அண்ணாவின் பொதுவுடைமை சிந்தனை**

அண்ணாவின் நினைவுநாளில் அவரைப் பற்றி பேசுவதும், அவரின் சிந்தனைப் போக்கும் செயல்பாடுகளும் என்னவாக இருந்தன என்பதைப் பற்றி சிலவற்றை பகிர்ந்து கொள்வது நமக்கு நன்மை பயக்கும் என்ற கருத்தில்தான் அண்ணா நினைவுநாள் கருத்தரங்கை ஏற்படுத்தியிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

1930-களில் எம்.ஏ என்பது உயர்ந்த படிப்பாக பார்க்கப்பட்டது. ஆனால் அந்த உயர்ந்த படிப்பை முடித்துவிட்டு அரசுப் பணிக்கோ, மற்ற வேலைக்கோ செல்லாமல் சமூகப் பணிக்கு வந்தார் என்பதே அண்ணாவை பற்றிய ஒரு பெரிய மதிப்பை நம் மனதில் ஏற்படுத்தும். அறிஞர் அண்ணா எளிய குடும்பத்தில் பிறந்து முதுநிலை கல்வியை முடித்தவர். அரசியலில் சமூகப்பணியில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் அவர் பெரியாரிடம் வந்த பிறகு ஏற்பட்டது என்று கூட நான் சொல்ல மாட்டேன்.

ஏனென்றால் அண்ணா 1934 திருப்பூர் செங்குந்தர் மாநாட்டில்தான் பெரியாரை முதல்முறையாக சந்திக்கிறார். அந்த மாநாட்டில் பெரியார் சமதர்மம் என்ற தலைப்பில் உரையாற்றுகிறார். பொதுவுடைமை ஏன் தேவை என்பதை பற்றிய உரை அது. அந்த உரையை கேட்டுத்தான் அவர் பொதுவாழ்விற்கு வந்திருப்பாரா என்றால் இல்லை. அதைப்பற்றிய சிந்தனைப் போக்கு அவரிடம் ஏற்கனவே இருந்திருக்கிறது. கல்லூரி மாணவராக இருந்தபோது நடைபெற்ற கட்டுரைப் போட்டி ஒன்றில் அண்ணா தேர்ந்தெடுத்த தலைப்பு 'Moscow Mob Parade'. மாஸ்கோவில் நடைபெற்ற ஒரு பெரும் பேரணியைப் பற்றி எழுதினார். அதில் இந்த நாட்டிற்கு கொடுத்த சிந்தனைகளைப் வரிசைப் படுத்தி எழுதுகிறார். சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம் கன்ற கருத்தியலை நமக்கு ரூசோ வழங்கினார். அதற்கு பிறகு புதிய அரசியல் தத்துவத்தை மார்க்ஸ் கொடுத்து பெரும் சிந்தனைப் புரட்சியை உருவாக்கியவர் என்று அந்த கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

1934இல் பெரியாரின் சமதர்மப் பேச்சுக்கு 2 ஆண்டுகளுக்கு முன்னாலே பொதுவுடைமை குறித்த சிந்தனை அண்ணாவின் மனதில் இருந்திருக்கிறது. வறுமையால் சிரமமுற்றிருக்கிற மக்கள், கொடுங்கோன்மையால் நசுக்கப் பட்டிருக்கும் மக்கள் நடத்திய தடுக்க முடியாத பேரணி அது என்று சொல்லி, முதலாளித்துவக் கொடி இறங்கட்டும்! பாட்டாளிக் கொடி உயரட்டும்! என்று அந்த கட்டுரையை முடிக்கிறார்.

பொதுவாக அண்ணாவை பற்றி பேசும்போது பலரும் அவரது ஆங்கிலப் புலமை பற்றி கூறுவார்கள். அது உண்மைதான், ஆனால் எந்தெந்த இடத்தில் எதை சொல்ல வேண்டும் என்பதை அழுத்தமாக சொல்வார் என்பதும் அதைவிட சிறப்பு. முக்கியமாக நாடாளுமன்றத்தில் அவரது உரைகள் எப்படி இருந்தன என்பதை குறிப்பிட வேண்டும். 1962-இல் மாநிலங்களவைக்கு அண்ணா தேர்ந்தெடுக்கப்படுகிறார். 1962 மே 1ஆம் தேதி தனது முதல் உரையை மாநிலங்களவையில் ஆற்றினார். முதல் உரையில் I Belong to The Dravidian Stock என்று குறிப்பிட்டுப் பேசினார். "நான் திராவிட இனத்தில் இருந்து வருகிறேன். திராவிட இனத்தவன் என்று சொல்லுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன். அதற்காக நான் மராத்திக்கோ, குஜராத்திக்கோ எதிரி அல்ல, அவர்கள் எல்லாம் என் நண்பர்கள் தான், ஆனால் திராவிடர்களாகிய நாங்கள் இந்த உலகிற்கு தனித்துவமான கொடைகளைக் கொடுத்துள்ளோம். சிறப்பான பங்களிப்பைக் கொடுத்தவர்கள் என்ற பெருமையோடு நான் உங்கள் முன் பேசுகிறேன். எங்களுக்கு சுய நிர்ணய உரிமை வேண்டும்" என்று சொல்கிறார். 1969-இல் மாநில சுயாட்சி பற்றி பேசிய அவர், 1962இல் சுய நிர்ணய உரிமை பற்றி மாநிலங்களவையில் பேசினார்.

**'திராவிட நாடு'- அண்ணாவின் இலக்கணம்**

மிகப்பெரிய பணக்காரர்கள் தான் நீதிக்கட்சியை தொடங்கினார்கள். அவர்களை ஜரிகை தலைப்பாகைகள் என்று சொல்லுவதுதான் வழக்கம். ஆனால் அவர்கள் ஏழை மக்களை பற்றி சிந்திப்பவர்களாக இருந்தார்கள். அதுதான் திராவிட இயக்கத்தின் சிறப்பு. நீதிக்கட்சியை தொடங்கியவர்களில் ஒருவரான டாக்டர் டி.எம் நாயர் MD படித்தவர், பிரான்சில் ENT முடித்தார். பிறகு இங்கிலாந்தில் மருத்துவராக பணியாற்றிய பின்னர் இந்தியாவிற்கு வருகிறார். இந்தியாவிற்கு வந்த பின்னர் தான் அந்த இயக்கத்தில் இணைந்து பணியாற்ற தொடங்குகிறார். அப்போதுதான் ஜஸ்டிஸ் என்ற ஒரு ஆங்கில ஏடு தொடங்கப்படுகிறது. அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார் டி.எம்.நாயர்.

அப்போது தலையங்கத்தில் இந்த இயக்கம் எதற்காக தொடங்கப்பட்டது என்று எழுதுகிறார். இந்தியாவில் தனித்த இறையாண்மை கொண்ட சகோதர மொழிகளான தமிழ், தெலுங்கு,



மலையாளம், கன்னடம் ஆகியவற்றின் நாடுகளை கொண்ட பிரிந்து செல்லும் உரிமையுள்ள ஒரு குடியரசை நிறுவ விரும்பி நாங்கள் இயக்கம் தொடங்கியிருக்கிறோம் என்று 1917-இல் ஜஸ்டிஸ் ஏட்டின் தலையங்கத்தில் எழுதுகிறார். தந்தை பெரியார் 1938-இல் இதே கருத்தை வலியுறுத்திப் பேசியுள்ளார்.

இருக்கிற பார்ப்பனர்கள் எல்லாம் நேரடியாக மத்திய ஆசியாவில் இருந்து வந்தவர்கள் என்று நான் சொல்ல வரவில்லை

> **வீடு இருந்தால் தான் ஓடு மாற்ற முடியும். ஆட்சி மாற வேண்டுமென்றால் கட்சி இருக்க வேண்டும். ஆனால் நாங்கள் திராவிடர் கழகத்தில் இருந்து வந்தவர்கள். எங்களை தடுத்துவிட்டீர்கள், திராவிடர் கழகத்தை என்ன செய்ய போகிறீர்கள், என்ன திட்டம் உங்களிடம் உள்ளது? அவர்களிடம் உங்கள் சட்டம் செல்லுமா என்று கேட்டார் அண்ணா.**

என்பார் பெரியார். "அவர்கள் குறைவான பெண்களோடுதான் வந்தார்கள். பின்னர் இந்த நாட்டு பெண்களைத்தான் திருமணம் செய்துகொண்டனர். நம்மவர்கள் கேள்வி கேட்கும் போது திரௌபதி கதையை எழுதி சமாளித்துவிட்டனர். ஆனால் நான் ரத்த பரிட்சை செய்து அவர்களை ஒதுக்கவில்லை. இவர்களுடைய ஆஷ்டான அனுஷ்டானங்கள் நமக்கு நேரெதிராக இருக்கிறது. அதில் நாம் வேறுபடுத்திக் காட்டுவதால் நம்மோடு விலகி நிற்கிறார்கள். அதனால்தான் அவர்கள் வேறு, நாங்கள் வேறு என்று நினைத்துக் கொள்கிறோம். அவ்வளவு தான். அதை மாற்றிக் கொள்வதில் எனக்கு என்ன சிக்கல்?" என்றார் பெரியார்.

ஒருவர் நீங்கள் பார்ப்பனர்களை திட்டுகிறீர்கள், பூணூல் அணிவதை விமர்சிக்கிறீர்கள், பூணூலை அகற்றிவிட்டால் ஒத்துக்கொள்வீர்களா? என்று பெரியாரிடம் கேட்டார். உடனே பெரியார் உனக்கு கீதை பெரிதா? குறள் பெரிதா? என்று கேட்பேன். வேதம் பெரிதா? குறள் பெரிதா? என்று கேட்பேன். குறள்தான் பெரிதென்றால் அவனிடம் எனக்கு என்ன பிரச்சனை. தமிழ் உயர்ந்ததா? சமஸ்கிருதம் உயர்ந்ததா? என்று கேட்பேன், தமிழ்தான் உயர்ந்தது என்றால் அவனோடு எனக்கு என்ன சிக்கல், அவனையும் சேர்த்துக் கொள்ளப்போகிறேன். அதையும் சொல்லிவிட்டு நான் தமிழன் என்றால் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்றார் பெரியார். அதையேத்தான் அண்ணாவும் சொன்னார். திராவிட நாடு என்ற போது அண்ணாவை நகையாடினர் சிலர். "இனவழி கூடி மொழிவழி பிரிந்து, பிரிந்து செல்லும் உரிமையோடு கூடிய சமதர்ம கூட்டரசாக திராவிட நாடு இருக்கும்" இதுதான் அண்ணாவின் திராவிட நாடு. இப்படியான சிந்தனையை கொண்டவராகத்தான் அண்ணா இருந்திருக்கிறார்.

**நாடாளுமன்றத்தில் அண்ணாவின் சவால்**

1963-இல் சி.பி.ராமசாமி அய்யர் தலைமையில் தேசிய ஒருமைப்பாட்டுக் குழு என்ற ஒன்று அமைக்கப்பட்டது. இவர் திருவாங்கூர் திவானாக இருந்தபோது, இந்தியா விடுதலை பெற்ற சமயத்தில் "நாங்கள் ஒருநாளும் இந்தியாவோடு சேர மாட்டோம், தனி சுதந்திர நாடாக செயல்படுவோம், பாகிஸ்தானோடு உடன்படிக்கைக்கு பேசிக்கொண்டிருக்கிறோம்" என்று சொன்னார். ஆனால் அடுத்த பத்து ஆண்டுகளில் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவுக்கு தலைவராகி விட்டார். பாகிஸ்தானோடு போகிறேன் என்று சொன்ன ஐதராபாத் நிஜாமை இன்னமும் எதிரியாக பார்க்கிறான். ஆனால் சி.பி. ராமசாமி அய்யரும் அதைத்தான் சொன்னார். அவர் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுத் தலைவரானார்.

வேட்பாளர் விண்ணப்பத்தில் நான் இந்திய ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொள்கிறேன் என்று கையொப்பம் போட வேண்டும். அதுதான் அந்த சட்டம். கையெழுத்து போட்டுவிட்டால் இனி தனி நாடு கேட்க முடியாது. அதற்காகத்தான் அந்த சட்டம். இப்போது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றிய அரசோடு கூட்டு சேர்ந்துட்டது, இந்தியாவிற்கு அடிமையாகிவிட்டார்கள் என்று தமிழ்தேசியவாதிகள் கூறிவருகிறார்கள். ஆனால் இந்த தமிழ்தேசியவாதிகள் அனைவருமே தேர்தலில் நிற்பதற்காக, இந்திய ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொள்கிறேன் என்று கையொப்பம் போட்டுவிட்டுதான் தேர்தலில் நிற்கிறார்கள். நான் உங்களிடம் ஒரு உறுதிமொழியை தருகிறேன் என்று அண்ணா சொன்னார். "சட்டத்தின் அடக்குமுறையைக் கொண்டு எங்களை அடக்கி தேர்தலில் நிற்க வைக்காமல் செய்தால், அடுத்த ஆளுங்கட்சி நாங்கள்தான் என்று 1963-இல் நாடாளுமன்றத்தில் அண்ணா சொன்னார். அந்த நம்பிக்கையோடுதான் இந்த சட்ட திருத்தத்தை அண்ணா ஏற்றுக்கொண்டார்.

வீடு இருந்தால் தான் ஓடு மாற்ற முடியும். ஆட்சி மாற வேண்டுமென்றால் கட்சி இருக்க வேண்டும். ஆனால் நாங்கள் திராவிடர் கழகத்தில் இருந்து வந்தவர்கள். எங்களை தடுத்துவிட்டீர்கள், திராவிடர் கழகத்தை என்ன செய்ய போகிறீர்கள், என்ன திட்டம் உங்களிடம் உள்ளது? அவர்களிடம் உங்கள் சட்டம் செல்லுமா என்று கேட்டார் அண்ணா. ஒவ்வொரு இடத்திலும் தனது அழுத்தமான கருத்தை பதிவு செய்வதில் தவறியதில்லை அவர். நாடாளுமன்றத்தில் ஒருநாள் "நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்! நான் பிரிவினையை கேட்டதற்கான காரணங்கள் அப்படியே இருக்கிறது" என்று சொன்னார். திராவிட நாடு கோரிக்கையைத்தான் கைவிட்டுள்ளோம், காரணங்கள் அப்படியே இருக்கும் வரை கோரிக்கை எழும். அதை வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் டெல்லி அரசின் வேலை என்று சொன்னார் அண்ணா.

(தொடரும்)

தொகுப்பு : விஷ்ணு

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# திருப்பூர், கடலூர், மதுரையில் “சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்” பொதுக்கூட்டம்!

**திருப்பூர் :** திருப்பூர் மாவட்டக் கழக சார்பில் “சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்!” எனும் முழக்கத்தோடு 2024 பாராளுமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டம் 05.03.2024 அன்று குன்னத்தூர் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு குன்னத்தூர் பகுதிப் பொறுப்பாளர் அய்யப்பன் தலைமை தாங்கினார், குன்னத்தூர் சின்னச்சாமி, திருப்பூர் மாநகர அமைப்பாளர் முத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, தமிழ்நாடு மாணவர் கழக மகிழவன், தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், மாவட்டத் தலைவர் முகில் ராசு, கழக சமூக வலைதளப் பொறுப்பாளர் பரிமளராசன் ஆகியோர் கருத்துரையாற்றினர். நிறைவாக கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி சிறப்புரையாற்றினார்.

15 வேலம்பாளையம் பொறுப்பாளர் மாரிமுத்து நன்றி கூறினார். இதில் மாநகர அமைப்பாளர் மாதவன், சரஸ்வதி மற்றும் பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் பலரும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

**கடலூர் :** கடலூர் மாவட்டக் கழக சார்பில் “சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்!” என்ற முழக்கத்தோடு 2024 நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டம் 07.03.2024 அன்று மங்களூரில் நடைபெற்றது.



விடுதலைக் குரல் கலைக் குழுவின் இசை நிகழ்ச்சியுடன் பொதுக் கூட்டம் தொடங்கியது.

கூட்டத்திற்கு கடலூர் மாவட்டக் கழக அமைப்பாளர் க.நா. கொளஞ்சி கூட்டதிற்கு தலைமை தாங்கினார், மாவட்டத் தலைவர் மதன்குமார் முன்னிலை வகித்தார், மாவட்டத் துணைத் தலைவர் செ. பிரகாசு வரவேற்புரையாற்றினார்.

தொடர்ந்து தமுமுக மாவட்டச் செயலாளர் M. மதார்ஷா, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி, கழகத் தலைமைக்குழு உறுப்பினர் ந. அய்யனார், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பாலமுருகன், மதிமுக (மே) ஒன்றியச் செயலாளர் PR. சம்பத்குமார், மற்றும் விசிக கிருஷ்ணமூர்த்தி, கழக விழுப்புரம் மாவட்டத் தலைவர் பூ.ஆ.இளையரசன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

கழக கள்ளக்குறிச்சி மாவட்டத் தலைவர் மதியழகன், நாகராஜ், ரிஷிவந்தியம் ஒன்றியச் செயலாளர் கார்மேகம், விடுதலைக் களம் யூடியூப் சேனல் சத்தியராசு, மனிதநேய மக்கள் கட்சி வடக்கு மாவட்டச் செயலாளர் சாகுல் ஹமீது, மாவட்ட துணைச் செயலாளர் காதர் ஷெரிப், திட்டக்குடி நகரத் தலைவர் ஜான் பாட்ஷா, நகரச் செயலாளர் ஹம்சா முகமது, நகரப் பொருளாளர் சுபேதார் பாஷா, அஜீஸ் மற்றும் மாலிக் பாஷா ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

அறிவியல் மன்ற அமைப்பாளர் ப. அறிவழகன் நன்றி கூற பொதுக்கூட்டம் நிறைவடைந்தது.

**மதுரை :** மதுரை மாவட்டக் கழக சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! என்ற முழக்கத்தோடு 2024 நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரை தொடக்க பொதுக்கூட்டம் 09.03.2024 அன்று புதூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழக காப்பாளர் தளபதி தலைமை தாங்கினார், மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி முன்னிலை வகித்தார்.

மதுரை மாவட்டக் கழகச் செயலாளர் மா.பா.மணிஅமுதன், சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் பெரியார் முத்து ஆகியோர் பொதுக்கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசினார்கள்.

தொடர்ந்து மதுரை மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இன்குலாப், தமிழ்ப் புலிகள் கட்சி மாநில செய்தி தொடர்பாளர் முத்துக் குமார், தமிழக முன்னேற்றேக் கழகத் தலைவர் ம.து.ராஜ்குமார், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட பேச்சாளர் உய். அப்பாஸ், மக்கள் சட்ட உரிமை இயக்க தலைவர் அண்ணாத்துரை, ஆதித்தமிழர் கட்சி மாவட்டச் செயலாளர் சந்துரு உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர்.

நிறைவாக மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி நன்றி கூறினார். இதில் வேங்கைமாறன், முருகேசன், வாசுகி, மருது பாண்டி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கொளத்தூரில் தோழர் செல்லமுத்துவின் நினைவேந்தல் நிகழ்ச்சி

**சேலம் :** கொளத்தூர் நிர்மலா பள்ளி ஆசிரியரும் கழகத் தோழருமான செல்வேந்திரனின் தந்தை பெ.செல்லமுத்து கடந்த 04.03.2024 அன்று முடிவெய்தினார். அவரது உடலுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.



தொடர்ந்து பெ. செல்லமுத்துவின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் கூட்டம் 10.03.2024 அன்று கொளத்தூர், உக்கம் பருத்திக்காட்டில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

முன்னதாக மறைந்த தோழர் பெ. செல்லமுத்துவின் படத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற நினைவேந்தல் கூட்டத்திற்கு கொளத்தூர் ஒன்றிய பொறுப்பாளர் இரா. விஜயகுமார் தலைமை தாங்கினார், சேலம் மேற்கு மாவட்ட தலைவர் சூரியகுமார், உக்கம்பருத்திக்காடு கிளைத் தலைவர் சுப்பிரமணியம், TNEB ஈரோடு பெ.அன்புச்செழியன், மருத்துவர் வ.ப.வீரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஓய்வு பெற்ற ஆசிரியர் கண்ணம்மாள், நிர்மலா மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் ம.விஜய் அமுல்ராஜ் ஆகியோர் தோழர் செல்லமுத்து அவர்களுடனான தங்களது நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில் மறைந்த தோழர் செல்லமுத்துவின் கொள்கைப் பற்றையும், இயக்க நிகழ்வுகளில் அவரின் பங்களிப்பையும், தோழர்களோடு நகைச்சுவை உணர்வோடு கழக பணியாற்றிய பசுமையான நினைவுகளை பகிர்ந்தார். மேலும் இது போன்ற நிகழ்வுகளில் பார்ப்பனர்களை தவிர்த்து நடத்தப்படுவது என்பது திராவிட இயக்கம் ஏற்படுத்திய பண்பாட்டு புரட்சி என்பதையும் தனது நினைவேந்தல் உரையில் குறிப்பிட்டு பேசினார்.

தோழர் செல்லமுத்துவின் மகனும், நிர்மலா மேல்நிலைப் பள்ளி ஆசிரியருமான செ.செல்வேந்திரன் நன்றி கூறினார். தோழர் செல்லமுத்துவின் உடலை கழகப் பெண்களே சுமந்து சென்றது குறிப்பிடத்தக்கது.

மறைந்த தோழர் செல்லமுத்துவின் நினைவாக அவரது பெயரன் யாழ் இன்பன் கழக வளர்ச்சி நிதியாக ரூ.5000-யை கழகத் தலைவரிடம் வழங்கினார். இந்நிகழ்வில் கழகத் தோழர்கள், உறவினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சென்னையில் எழுச்சியோடு நடைபெற்ற மகளிர் தின நிகழ்ச்சி

**சென்னை :** அன்னை மணியம்மையார் 105வது பிறந்தநாள் மற்றும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சென்னை மாவட்டக் கழகம் சார்பில் மகளிர் சந்திப்பு நிகழ்வு 10.03.2024 அன்று மயிலாப்பூரில் உள்ள கழகத் தலைமை அலுவலகத்தில் காலை 10 மணிக்கு தொடங்கி மாலை 5 மணி வரை நடைபெற்றது.



பிரீத்தி வரவேற்புரை யாற்றினார். தொடர்ந்து கழகத் தோழர்கள் இரண்யா, தேன்மொழி, ரம்யா ஆகியோர் பல்வேறு தலைப்புகளின் கீழ் கருத்துரை வழங்கினர்.

தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் தோழர் சிவகாமி, சமூக செயற்பாட்டாளர்கள் அக்னி - மரக்கா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று சிறப்புரையாற்றினார்கள். மதிய உணவிற்கு பிறகு தோழர்கள் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். நிறைவாக யாழினி நன்றி கூறினார்.

**திருப்பூர் :** உடுமலையில் ஆதித்தமிழர் பேரவை சார்பில் 08.03.2024 அன்று நடந்த மகளிர் தின விழாவில் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் தேன்மொழி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP

Posted March 15, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran